அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 28/2022

எனது இலக்கம் : EST-6/03/LEA/3162(1)

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2022.12.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>சேவைமூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு பாதிப்பில்லாத வகையில் அரச உத்தியோகத்தர்களுக்கு கலாநிதி பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு சம்பளமற்ற லீவு வழங்குதல்</u>**

தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 15:1:1 உறுப்புரையை பின்வருமாறு திருத்துவதற்கும், 16:16 என புதிய உறுப்புரையொன்றை பின்வருமாறு சேர்ப்பதற்கும் 2022.09.12 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

15:1:1 எவ்வாறாயினும், முதுமானி அல்லது அதற்கு சமமான பட்டப்படிப்பைத் தொடர்ந்த பின்னர், கலாநிதி பட்டப்படிப்பைத் தொடர அரச உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டில் 3 ஆண்டுகள் வரையில் சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியத்திற்கு கணக்கிடப்படக்கூடியவாறு சம்பளமற்ற லீவு வழங்கப்பட முடியும்.

தடையற்ற பதவி உயர்வு அல்லாத பதவி உயர்வு தொடர்பான வெற்றிடமானது, உத்தியோகத்தரால் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளமற்ற லீவு காலத்தில் இருந்தாலும், அல்லது அந்த உத்தியோகத்தர் சம்பளமற்ற லீவு காலத்தை நிறைவு செய்து மீள சேவைக்கு சமூகமளித்ததன் பின்னராக இருந்தாலும், அல்லது விதிக்கப்பட்ட நடைமுறை ஒழுங்குவிதியைப் பின்பற்றி உத்தியோகத்தர் சம்பளமற்ற லீவு காலத்தை முடிவுறுத்தி சேவைக்கு சமூகமளித்ததன் பின்னர் அடுத்துவரும் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அப்பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

16:16 தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16:1:2 மற்றும் 16:1:3 உறுப்புரைகளின் கீழ் கலாநிதி பட்டப்படிப்பைத் தொடர சம்பளமற்ற வெளிநாட்டு லீவினைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு அவ்வாறு பெற்றுக்கொள்ளும் சம்பளமற்ற வெளிநாட்டு லீவு காலத்திற்காக மேலே உள்ள 16:8, 16:9,16:10 மற்றும் 16:11 உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள்

ஏற்புடையதாகாது என்பதுடன், அந்த சம்பளமற்ற வெளிநாட்டு லீவு காலம் அவர்களின் சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியத்தை கணக்கிடுவதற்கான சேவைக்காலமாக கணக்கிடப்பட வேண்டும்.

தடையற்ற பதவி உயர்வு அல்லாத பதவி உயர்வு தொடர்பான வெற்றிடமானது, உத்தியோகத்தரால் பெற்றுக்கொள்ளப்பட்ட சம்பளமற்ற லீவு காலத்தில் இருந்தாலும், அல்லது அந்த உத்தியோகத்தர் சம்பளமற்ற லீவு காலத்தை நிறைவு செய்து மீள சேவைக்கு சமூகமளித்ததன் பின்னராக இருந்தாலும், அல்லது விதிக்கப்பட்ட நடைமுறை ஒழுங்குவிதியைப் பின்பற்றி உத்தியோகத்தர் சம்பளமற்ற லீவு காலத்தை முடிவுறுத்தி சேவைக்கு சமூகமளித்ததன் பின்னர் அடுத்துவரும் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அப்பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

02. தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 15 ஆம் அல்லது 16 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின்படி, ஏற்கனவே உள்நாட்டு அல்லது வெளிநாட்டு சம்பளமற்ற லீவினைப் பெற்று கலாநிதி பட்டப்படிப்பைத் தொடரும் அங்கீகரிக்கப்பட்டசம்பளமற்ற லீவு காலத்தை கடக்காத உத்தியோகத்தர்களுக்கும், இந்த சுற்றறிக்கையின் விதிகள் நடைமுறைக்கு வரும் திகதிக்குப் பின்னரான அந்த சம்பளமற்ற லீவு காலத்தினை அவர்களின் சேவை மூப்பு மற்றும் ஓய்வூதியத்தை கணக்கிடுவதற்கான சேவைக்காலமாக கணக்கிட வேண்டும்.

03. பதவி அல்லது சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் அல்லது சேவை பிரமாணக் குறிப்பில் கலாநிதி பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்ற ஏற்பாடுகளை உள்ளடக்காத ஒரு பதவியை வகிக்கும் அல்லது சேவையைச் சேர்ந்த ஒரு அரசாங்க உத்தியோகத்தருக்கு இதன் பின்னர் கலாநிதி பட்டப்படிப்பிற்காக மேற்கூறிய விதிகளின்படி மட்டுமே கலாநிதி பட்டப்படிப்பிற்காக லீவு அனுமதிக்கப்பட வேண்டும் என்பதை இதன் மூலம் வலியுறுத்துகிறேன்.

04. இந்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் 2022.09.12 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

ஒப்பம்./ எம்.எம்.பி.கே. மாயாதுன்னே
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112-699399
தொலைநகல் இலக்கம் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி : ade-vi@pubad.gov.lk